DINAKARAN

PAGE NO: 14

DATE: 09.09.2023

### புதுச்சேரி பல்கலைக்கழகத்தில்

# சபாய் கரம்சாரிகளுக்கான ஆய்வு கூட்டம்




புதுவை பல்கலைக்கழகத்தில் சபாய் கரம்சாரிகளுக்கான தேசிய ஆணையத்தின் தலைவர் வெங்கடேசன் தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடந்தது. அருகில் துணைவேந்தர் குர்மீத் சிங்.

**புதுச்சேரி, செப். 9:** புதுச்சேரி பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம், இந்திய அரசு, சபாய் கரம்சாரிகளுக்கான தேசிய ஆணையத்தின் தலைவர் வெங்கடேசன் புதுவை பல்கலைக்கழகத்திற்கு "கையால்சுத்தம் செய்யும் துப்புரவாளர்களாக பணியமர்த்துவதை தடை செய்தல் மற்றும் அவர்களின் மறுவாழ்வு சட்டம், 2013" ஆகியவற்றை மதிப்பாய்வு செய்ய வருகை தந்தார்.

இது சம்பந்தமாக துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங்கிடமும், சபாய் கரம்சாரிஸ் நிறுவனத்தாரிடமும், சபாய் கரம்சாரிஸ் தலைவர் கலந்துரையாடினார். இந்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் சபாய் கரம்சாரிகளுக்கான தேசிய ஆணையத்தின் தலைவர் என்ற முறையில் சபாய் கரம்சாரிகளுக்கு இந்த ஆய்வுக்கூட்டம் ஒரு சிறந்த வாய்ப்பாகவும் அனுபவமாகவும் இருந்தது. இந்த ஆய்வு கூட்டத்தில் பேராசிரியர் தரணிக்கரசு, இயக்குநர் ராஜீவ் ஜெயின், கலாசார மற்றும் கலாசார உறவுகள் பேராசிரியர் ரஜ்னீஷ் பூடானி, பதிவாளர் லாசர், நிதி அலுவலர் டாக்டர் நந்த கிஷோர், மக்கள் தொடர்பு அதிகாரி மற்றும் புதுவை பல்கலைக்கழகத்தின் பிற அதிகாரிகள் கலந்து கொண்டனர்.